பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 25 செவ்வாய்க்கிழமை 10.09.2024 கதிர் 307

## இது ரகசியம் அல்ல!

ஜனாதிபதித் தேர்தலில் யார் யாரோ கொள்கை, கோட்பாடு என்று கத்திக்கொண்டு கிடந்தாலும் இடையிடையே சுவாரஸியமான சம்பவங்களுக்கும் ☞2

# அசிங்கமாக இனவாதத்தை விதைக்க முயற்சிக்காதீர்கள்

## ரணிலுக்கு அநுர சாட்டையடி

ரணில்விக்கிரமசிங்க,நீங்கள்அசிங்கமான வகையில்அரசியலில்இனவாதத்தைவிதைக்க முயற்சிசெய்ய வேண்டாம். இலங்கையில் இதுவரைகாலமும் இருபக்கத்துக்கும் பரிமாறிக்கொண்டிருந்த அரசியல் அதிகாரம் இந்த செப்டெம்பர் 21 முற்றுப்பெறுவது நிச்சயமாகிவிட்டது. இதன் காரணமாக பகைவர்கள் அனைவரும் அரசியல் வாதங்களுக்குப் பதிலாக பொய்யான குறைகூறல்கள், திரிபுபடுத்தல்களை பெருமளவில் பரப்புரை செய்து வருகிறார்கள் என்று தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

நிறுவனங்களுக்கு இடையிலான ஊழியர் சங்கத்தின் 25 வது வருடாந்த மாநாடு - மாளிகாவத்த பி.டீ. சிறிசேன விளையாட்டரங்கில்நேற்றுஇடம்பெற்றபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

நான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கூறுகின்றேன் 'ரணில் விக்கிரமசிங்க, நீங்கள் அசிங்கமான வகையில் அரசியலில் இனவாதத்தை விதைக்க முயற்சி செய்ய வேண்டாம்.' என்றாலும் தான் அதற்கு ☞2

## கீதா குமாரசிங்க எம்.பி. சஜித் பக்கம் தாவினார்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்றஉறுப்பினர்கீதாகுமாரசிங்க எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் ☞8

## 51% வாக்காளர் அட்டை விநியோகம் நிறைவு

51 வீதமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகதபால்திணைக்களம் தெரிவித்துள்ளது.

33 இலட்சத்திற்கும் அதிகமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் நேற்றையதினம் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தபால் மாஅதிபர் பீ சத்குமார தெரிவித்தார்.

இதற்கமைய இதுவரை 87 இலட்சம் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. ஏனைய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள், செப்டெம்பர் ☞8

## சஜித்தை ஆதரிக்கும் கட்சியின் திர்மானத்தில் மாற்றம் இல்லை

### சுமந்திரன் எம்.பி. மீண்டும் வலியுறுத்து

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில்ஐக்கியமக்கள்சக்தியின்ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பது என்ற தீர்மானத்தில் மாற்றம் இல்லை என இலங்கைத் தமிழ் அரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறினார்.

அவர்தனதுடுவிட்டர்பக்கத்தில்செய்துள்ள பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி கூறியபடி,கட்சியின்ஒவ்வொருஉறுப்பினரின் நிலைப்பாடும்பொருத்தமானதீர்மானமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பொதுத் தமிழ் வேட்பாளர் அரியேந்திரனை ஆதரிக்க வேண்டும் என இளங்கை தமிழ் அரசு ☞8



## "பாஸ்போர்ட் தில்லுமுல்லுகள்" அம்பலப்படுத்தும் விஜித ஹேரத்

அமைச்சரவைபத்திரத்திற்கிணங்க 48 பக்கங்களை கொண்ட பாஸ்போர்ட்டுக்காக 7.98 டொலர் செலவாவதாக குறிப்பிடப்படுகிறது. ரூபாவில் எடுத்துக்கொண்டால் ஒரு பக்கத்திற்கு 31.00ரூபாசெலவாகின்றது. ஆனால் முன்னர் இருந்த விலை மட்டங்களுக்கிணங்க ரூபா 5.99 மாத்திரமே செலவாகியது. இந்தத் தில்லுமுல்லு காரணமாகவே ஆயிரக்கணக்கில் வரிசையில் அலைந்து திரிகிறார்கள் என்று தேசிய மக்கள்சக்தியின்தேசியநிறைவேற்றுப் பேரவைஉறுப்பினரும்,நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

பெலவத்தவில்உள்ளதேசியமக்கள் சக்தியின் தலைமையகத்தில் ☞2

## எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் பாதிக்கப்பட்ட எஞ்சிய மீனவருக்கும் விரைவில் இழப்பீடு

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் கடல் மாசுபட்டதில்வாழ்வாதாரம்பாதிக்கப் பட்ட மீனவர்களில் ஒரு பகுதியினருக்குஏற்கனவேஇழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள மீனவர்களுக்கு உரிய இழப்பீட்டுகள் ☞2

## தேர்தலை முன்னிட்டு பாடசாலை விடுமுறை

### கல்வி அமைச்சுக்கு ஆணைக்குழு கடிதம்

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பாடசாலைகளை மூடுவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவால் கல்வி அமைச்சுக்குக் கடிதம் அனுப்பப் பட்டுள்ளது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பின்னர், வாக்கெண்ணும் நிலையங்களைதயார்ப்படுத்தும்பணிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்களிப்புமையங்களாகப்பயன்படுத்தப்படவுள்ள பாடசாலைகளை எதிர்வரும் 19 மற்றும் 20ஆம் திகதிகளில் தயார்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக குறித்த கடிதத் தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைகளை பரிசீலித்து பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சு முன்னதாக தெரிவித்திருந்தது.

## முன்னாள் மாகாண அமைச்சரின் மகள் அக்குரஸ்ஸ பகுதியில் கைது

### ரவைகள் வைத்திருந்த குற்றச்சாட்டில்

மறைந்த மாகாண அமைச்சர் பி.பி.திஸாநாயக்கவின் மகளின் அக்குரஸ்ஸ, கலன்பிந்துனுவெவ பகுதியில்உள்ளவீட்டில்28துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டது0. இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

பி.பி.திஸாநாயக்க 2000 ஆம் ஆண்டுகாலமானார். அண்மையில், அவரது 11 வயதான பேரன் வெடிமருந்துகள் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அவரது ☞8

### உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு தொடர்பில்

## முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ரூ. 75 மில். இழப்பீடு செலுத்தினார்

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் உயர் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்ட இழப்பீடான 75 மில்லியன் ரூபாவை முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர செலுத்தியுள்ளார். குறித்த முழுத் தொகையையும் 8 தடவைகளில் இவர் செலுத்தியுள்ளார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு விதிக்கப்பட்ட 100 மில்லியன் ரூபா நட்டஈட்டுக் கொடுப்பனவை ஒகஸ்ட் 16ஆம் திகதியுடன் முழுமையாகச் செலுத்தியிருந்தார்.

இது தவிர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும்முன்னாள்தேசியபுலனாய்வுப் பிரிவின் தலைவர் சிசிர மெண்டிஸ் ஆகியோரும் உரிய நட்டஈட்டை செலுத்தியுள்ளனர்.

2023 ஜனவரி 12 ஆம் திகதி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பாதுகாப்புப் படைத் தலைவரும் போதிய உளவுத்துறை தகவலைப் பெற்றிருந்தும் ஈஸ்டர் ஞாயிறு தொடர் பயங்கரவாதத் தாக்குதல்களைத்தடுக்கத்தவறியதன் மூலம் அரசமைப்பின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்று உயர்நீதிமன்றம்தீர்ப்பளித்தது. ☞8

## "ரணிலே மன்னிப்புக் கோரவேண்டும்"

### விஜித ஹேரத் எம்.பி. சீற்றம்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் வடக்கில் தெரிவித்த கருத்துக்களைத் திரித்து, அதனை இனவாதமாகக் காட்ட முயற்சிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே முதலில் மன்னிப்புக்கோரவேண்டும்என்று சீறியிருக்கிறார் அந்தக் கட்சியின் என்று தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவித்தார்.

வடக்குக்கு வந்திருந்த அநுர குமார திஸநாயக்க, தனது பரப்புரைக் கூட்டங்களில், "தெற்கில் உள்ளவர்கள் தன்னை வெற்றிபெறச்செய்வதற்குதயாராக இருக்கின்றார்கள். அவ்வாறான நிலையில்அவர்களின்மனோநிலை மாறினால்எவ்விதமானநிலைமை ஏற்படும்என்றுஎனக்குத்தெரியாது. அவர்களின் மனோநிலை மாறுபடுவதற்கு அல்லது அவர்களின் நிலைப்பாட்டில் இருந்து நீங்கள் வேறுபடுவதற்கு தயராக இருக்கின்றீர்களா? வடக்கு மக்கள் தெற்கின் நிலைப்பாட்டிற்கு எதிரானவர்கள் என்று காண்பிப்பதற்கு நீங்கள் விரும்புகின்றீர்களா? நாங்கள் வெற்றிபெறவுள்ளோம். நீங்களும் வெற்றியின் பங்குதாரர்களாக ஆகவேண்டும். எதற்கு எதிரானவர்களாக எப்போதும் மாறிவிட வேண்டாம்" என்று தெரிவித்தார் என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

அநுரகுமாரவின் ☞8

## இனி இது .....

-குறைவில்லை.

தேர்தல் பிரசார கூட்டத்தை நடத்துவதில் இரு வர்த்தகர்களிடையே ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஒரு வர்த்தகர் விளையாட்டு மைதான நுழைவாயிலை பூட்டு போட்டு பூட்டிய சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையம் வரையில் முறைப்பாடு சென்றுள்ளது. எல்லாம் நம்முடைய 'அமுல் பேபியுடன் தொடர்புபட்ட கதைதான்.

சுதந்திரக் கட்சியில் இருநத் அமுல் பேபி அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பக்கம் தாவியிருந்தார். அதன் பின்னர் ரணிலின் பரப்புரைக் கூட்டம் ஒன்றையும் நெல்லியடியில் நடத்தியிருந்தார். நெல்லியடி கொலின்ஸ் விளையாட்டு கழக மைதானத்திலேயே அந்தக் கூட்டம் நடந்திருந்தது. மைதானம் நிறையக் கூட்டத்தையும் கூட்டி ரணிலைக் குளிர்வித்தும் இருந்தார்.

இந்த நிலையில் அதே மைதானத்தில் சஜித் பிரேமதாசாவின் மனைவி ஜலனி பிரேமதாச பங்கேற்கும் பரப்புரைக் கூட்டம் இன்று காலையில் நடைபெற இருந்தது. இந்தக் கூட்டத்தை அமுல் பேபியின் சித்தப்பா ஏற்பாடு செய்திருந்தார். அமுல் பேபி குடும்பத்திற்குள் பிளவு ஏற்பட்டு அப்பாவும் சித்தப்பாவும் இப்போது ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் செய்கிறார்கள் என்பது தெரிந்தகதைதானே!

அதனால் ரணிலுக்கு வந்த கூட்டத்தைவிட அதிக கூட்டத்தைத் திரட்டி சஜித்துக்கு ஆதரவு தெரிவிக்க சித்தப்பா நடவடிக்கை எடுக்க, அது தொடர்பான ஏற்பாடுகளைக் கவனிக்கவென வர்த்தகர் ஒருவர் மைதானத்தினை நேற்றுப் பார்வையிடச் சென்றுள்ளார்.

அந்நிலையில் ஜனாதிபதியின் நிகழ்வுக்கு மைதானத்தை பெற்றவர், எதிர்க்கட்சி தலைவருக்கு ஆதரவான நிகழ்வுக்கு மைதானத்தை பெற்றவருடன் முரண்பட்டுள்ளார். இதையடுத்து மைதானத்தின் நுழையாவில் இழுத்து மூடப்பட்டு பூட்டுப்போட்டு பூட்டப்பட்டது. மட்டுமல்லாமல் ஜனாதிபதியின் நிகழ்வுக்கு மைதானம் பெற்றவர் தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்துள்ளார்.

முறைப்பாட்டின்படி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்தக் களேபரத்துக்கு மத்தியில் இன்று மைதானத்தில் சஜித் ஆதரவுக் கூட்டம் நடக்குமா இல்லையா என்பதும் உறுயாகத் தெரியவரவில்லை.

அப்பப்ப இப்படியான சில பல சம்பவங்களும் நிகழ்ந்தால்தானே ஒரு தேர்தல் நடக்கிறது என்கிற கலகலப்பு இருக்கும்.

......................

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளில் பல அத்துமீறல்கள் இடம்பெறுவது மற்றும் வெற்றிக்காகப் பொய்யான தகவல்கள் பரப்பப்படுவது என்று தேர்தல் விதி மீறல்கள் வகைதொகையற்று அதிகரித்துவரும் நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்களுடனான சந்திப்புக்கு தேர்தல் திணைக்களம் அவசர அவசரமாக அழைப்பு விடுத்துள்ளது. இன்று காலையில் இந்தச் சந்திப்பு நடக்க இருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

வேட்பாளர்களின் சந்திப்பு நடந்து முடிந்ததன் பின்னராக இன்று பிற்பகலில் தேர்தல் கண்காணிப்பாளர்களுடனும் தேர்தல் திணைக்களம் சந்திப்பு நடத்த இருக்கின்றது.

இதற்கிடையில், தெற்கில் வைரலாகப் பரவி வரும் ஒரு காணொலி தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நடக்கக்கூடிய வன்முறைகள் குறித்து தேசிய மக்கள் சக்தியின் அங்கத்தவர் எனக் கூறிக்கொள்ளும் நபர் ஒருவர் ஆவேசமான கருத்துக்கள் தெரிவிப்பதாக அந்தக் காணொலி அமைந்துள்ளது. கொழும்பு மாவட்ட தேர்தல் சர்ச்சைத் தீர்வு மையம் முதலில் இந்தக் காணொலி தொடர்பில் அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தது.

சமீபத்திய நாட்களில் சமூக ஊடக தளங்களில் பரவி வரும் இந்தக் காணொலி, தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் ஓய்வுபெற்ற இராணுவ உறுப்பினர்கள் சங்கம் ஏற்பாடு செய்த அரசியல் கூட்டத்திற்குப் பிறகு வெளிவந்ததாகக் கூறப்படுகிறது.

அந்தக் காணொலியில், தேசிய மக்கள் படையின் கட்சி சின்னம் பொறிக்கப்பட்ட டி -ஷர்ட் அணிந்த நபர் ஒருவர், 'நாங்கள் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளில் உள்ள அனைவரையும் தாக்குவோம்'' என்று கூறியிருந்தார். இந்தக் காணொலி வன்முறையை ஊக்குவிக்கும் வகையில் இருப்பதாக கவலை தெரிவித்துள்ள தேர்தல் ஆணையம், இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கூறியுள்ளது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## அசிங்கமாக ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளிக்க முன்னராக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சரியான பதிலை அளித்துள்ளமை தொடர்பில் அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

வடக்கிற்குச் சென்று இனவாதத்தை தூண்டிவிட ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட முயற்சியை வடக்கு மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் சுமந்திரனே நிராகரித்துள்ளார், இப்போது ரணில் நீங்கள் மன்னிப்புக் கோருங்கள்.

நாட்டில் மற்றவருக்கு எதிராக இனவாதத்தை விதைத்திட, ஒருவருக்கொருவர் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த மேற்கொள்கின்ற முயற்சிகள் இப்போது செல்லுபடியாகமாட்டாது. எனினும் ரணில் விக்கிரமசிங்கவினர் இப்போதும் பழைய கடையிலேயே பொருட் களை வாங்குகிறார்கள். ரணில் விக்கிரமசிங்க அண்மைக் காலமாக பல சந்தர்ப்பங்களில் 'எனது நண்பர் அநுர, எனது கூட்டாளி அநுர' எனக் கூறியிருக்கிறார். அது 'சேப்' ஆக்க வருவதாகும்.

ரணில் விக்கிரமசிங்க உங்களால் எங்களுடன் 'ஷேப்' ஆக முடியாது. மத்திய வங்கி மோசடி பற்றிய விசாரணைகளை மேற்கொள்வோம். காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளை நண்பர்களுக்கு பகிர்ந்தளித்த விதத்தை விசாரிப்போம்.

அதனைப் போலவே மோசடிக்காரர்கள், ஊழல் பேர்வழிகளை பாதுகாத்த விதம்பற்றி தேசிய மக்கள் சக்தியின் ஆளும்தரப்பு விசாரணைகளை மேற்கொள்ளும். அதேவேளையில் மென்மேலும் குறைகூறல் களை முன்வைத்து தேசிய மக்கள் சக்தி அதிகாரத்திற்கு வந்தால் செப்டெம்பர் 22 கலவரங்கள் இடம்பெறும் எனவும் பரப்புரை செய்து வருகிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி அதிகாரத்துக்கு வந்த பின்னர் வெற்றியை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்பதை நாங்கள் கற்றுக் கொடுப்போம். வெற்றி பெற்றதும் தோல்வி கண்டவர்களை துன்புறுத்தும் வரலாறு அவர்களுக்கே உள்ளது. . அன்று தேர்தல் வெற்றியின் பின்னர் இரண்டு வாரங்கள் பொலிஸாரை பொலிஸ் நிலையங்களில் முடக்கி வைத்து எதிர்கட்சியினர் மீது தாக்குதல் நடத்த, வீடுகளை தீக்கிரையாக்க, துப்பாக்கி பிரயோகம் செய்ய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்கள். எனினும் தேசிய மக்கள் சக்தி அதிகாரத்திற்கு வந்த பின்னர் வெற்றியை எவ்வாறு கொண்டாட வேண்டும் என்பதை நாங்கள் கற்றுக்கொடுப்போம்.

செப்டெம்பர் 23 தொடக்கம் ஒவ்வொரு கட்சியையும் சேர்ந்த ஆதரவாளர்களை சந்தித்து மாற்றமடையுமாறு அழைப்பு விடுப்போம். மாற்றமடைய விரும்பாவிட்டால் அவர்கள் விரும்பிய அரசியல் இயக்கத்தின் அரசியலில் ஈடுபடுவதற்கான உரிமை அவர்களுக்கு இருக்கிறது. அது ஒரு ஜனநாயக உரிமையாகும். செப்டெம்பர் 21 கட்சிகளாகப் பிரிந்து நாங்கள் உழைப்போம். செப்டெம்பர் 21க்கு பின்னர் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்காக எமக்கு வாக்களிக்காதவர்களையும் சேர்த்துக்கொண்டு இந்த நாட்டை கட்டியெழுப்புவோம். அதனால் வெற்றிக்கு பின்னர் ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு நகத்தின் நுனியினால் கூட சேதம் விளைவிக்க தேசிய மக்கள் சக்தி இடமளிக்கமாட்டாது என்றார்.

## பாஸ்போர்ட்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை வெறுத்து ஏறக்குறைய 3000 பேர்வரை நாளொன்றில் கடவுச்சீட்டுப் பெறவருகிறார்கள். எனினும் டெண்டர் தில்லுமுல்லுடன் 'ஒன்லைன்' முறைக்கிணங்க பாஸ்போர்ட் வழங்க ஆளும்தரப்புத் தீர்மானித்தது. அதன்படி நாளொன்றில் 250 முதல் 300 வரையான அளவே விநியோகிக்கப்படுகின்றது.

நிலைமை அவ்வாறு இருக்கையில் 'இ-பாஸ்போர்ட்' வழங்குவதற்கான டெண்டரைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்திற்குச் சாதாரண திட்டத்தின் கீழ் பாஸ்போர்ட் வழங்குவதற்கான வாய்ப்பினை பெற்றுக்கொடுப்பதற்காகக் கடந்த வாரத்தில் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டு அதன் விதப்புரையின் பேரிலெனக்கூறி, பழைய முறையின்படியே பாஸ்போர்ட் வழங்க அனுமதி கோரப்பட்டிருந்தது.

அந்த அமைச்சரவை பத்திரத்தில் 48 பக்கங்களைக் கொண்ட பாஸ்போர்ட் வழங்குவதல் பற்றியே குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் தொடக்கத்தில் 64 பக்கங்களை கொண்ட பாஸ்போர்ட்டே இருந்தது.

ஆரம்பத்தில் பாஸ்போர்ட் வழங்கிய நிறுவனம் ஏழுரை இலட்சம் பாஸ்போர்ட்டை துரிதமாக வழங்க தீர்மானித்துள்ளதாக அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த குறிப்பிட்டார். ஆனால் முன்னர் பெற்றுக்கொண்ட நிறுவனத்திற்கு டெண்டர் வழங்கப்பட்டிருப்பின் தாமதம் ஏற்பட்டிருக்கமாட்டாது. எனினும் 64 பக்கங்களைக் கொண்ட பாஸ்போர்ட்டை 48 பக்கங்களாக குறைத்தல் பற்றி வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஊடாக உலகின் 192 நாடுகளுக்கு உத்தியோகபூர்வ ரீதியாக அறிவித்தல் வழங்கப்படவேண்டும். அதற்கிணங்க அந்த நாடுகளின் அங்கீகாரத்தை பெற மேலும் இரண்டு மாதங்கள் வரை செல்லும்.

அமைச்சரவை பத்திரத்திற்கிணங்க 48 பக்கங்களை கொண்ட பாஸ்போர்ட்டுக்காக 7.98 டொலர் செலவாவதாக குறிப்பிடப்படுகிறது. ரூபாவில் எடுத்துக்கொண்டால் ஒரு பக்கத்திற்கு 31.00 ரூபா செலவாகின்றது. ஆனால் முன்னர் இருந்த விலை மட்டங்களுக்கிணங்க ரூபா 5.99 மாத்திரமே செலவாகியது.

இந்த தில்லுமுல்லு காரணமாகவே ஆயிரக்கணக்கில் வரிசையில் அலைந்து திரிகிறார்கள். இன்று இந்த நாட்டிலே இருக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ள அதேவேளையில் நாட்டை விட்டு வெளியேற இடமளிக்காமல் சிறைப்படுத்தியும் வைத்திருக்கிறார்கள்.

இந்த நிலைமையை விரைவில் மாற்றியமைத்து இதுவரை சாதாரண கடவுச்சீட்டு வழங்கிய விதத்திலேயே அவற்றை வழங்குமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம். அதன்படி 192 நாடுகளிடமிருந்து புதிதாக அங்கீகாரம் பெறப்படவேண்டியதில்லை.

அமைச்சர்களின் ஜனாதிபதிமார்களின் நட்புக்காக சூறையாட இடமளிப்பதன் மூலமாக இலங்கைக்கு வரவிருக்கின்ற இலங்கையர்களுக்கு வாய்ப்புக் கிடைக்க மாட்டாது. குறிப்பாக இந்த தேர்தல் காலத்தில் கடவுச்சீட்டு கலாவதியாவதால் இலங்கைக்கு வரமுடியாத நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் பழைய வெப்தளத்தை திறந்து அவசியமான வசதிகளை வழங்காதிருக்கிறார்கள். இந்த நிலைமையை உடனடியாக முடிவுக்கு கொண்டுவருமாறு ஆளும்தரப்பை வலியுறுத்துகிறோம்.

அதைப்போலவே தேர்தல் காலத்தில் மக்களை ஏமாற்ற பலவிதமான அரசியல் வாக்குறுதிகளை வழங்கியதோடு நகர்சார் மாடிவீடுகளில் இருக்கின்ற மக்களுக்கு உறுதிகளை வழங்குவதாக கூறினார்கள். எனினும் வழங்கப்பட்டுள்ள உறுதிகளில் சட்டபூர்வமாக இடம்பெறவேண்டிய உறுதி இலக்கம் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இந்த உறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. அதைப்போலவே உறுதியில் இரண்டு சாட்சிக்காரர்கள் கையொப்பம் இடவேண்டும். எனினும் இந்த உறுதிகளில் சாட்சிக்காரர்களைப் போன்று சான்றுப்படுத்தலும் மேற்கொள் ளப்படாத ஒரு கடதாசித் துண்டு வழங்கப் பட்டுள்ளது.

உறுதியொன்று சட்டபூர்வமானதாக அமையவேண்டுமானால் உறுதி இலக்கம் கட்டாயமாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மக்களின் பணத்தை விரயமாக்கி விழாக்களை நடத்தி அந்த சுமையையும் மக்கள் மீது சுமத்தி முன்னெடுத்து வருகின்ற தில்லுமுல்லு வேலைகளையும் நிறுத்த வேண்டும்.

குறிப்பாக நகர்சார் பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு கடந்த காலத்தில் வழங்கிய கடதாசித் துண்டை உறுதியெனக்கூறி வாக்குகளை அபகரிக்க மேற்கொள்ளப்படுகின்ற முயற்சியைக் கண்டு ஏமாந்துவிடவேண்டாம் என்று மக்களிடம் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறான கூட்டங்களுடன் மாத்திரம் நின்று விடாமல் ரணில் விக்கிரமசிங்க மேடைகளில் கபடத்தனமான கதைகளையும் கூற பழகியுள்ளார்.

ஏனைய மேடைகளில் முட்டாள்தனமான கதைகளைக்கூறுகின்ற அதேவேளையில் ரணில் விக்கிரமசிங்க கபடத்தனமான கதைகளையும் கூறிவருகிறார். மாத்தறை மொரவக்க கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க அநுர திசாநாயக்கவின் கொள்கைப் பிரகடனத்தை ஒரே இரவில் வாசித்து முடித்ததார் எனக்கூறினார்.

இது அப்பட்டமான பொய்யாகும். தேசிய மக்கள் சக்தி சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகளை ஒழிப்பதாக அவர் கூறினார். இவ்வாறான ஒரு குறிப்பீடு எங்களுடைய கொள்கை வெளியீட்டில் எந்தப் பக்கத்தில் எந்தப் பிரிவில் இருக்கிறதெனச் சுட்டிக்காட்டுமாறு சவால் விடுகிறேன்.

சுற்றியிருக்கின்ற துதிபாடுபவர்கள் கூறுகின்றவற்றை கேட்டு மேடைகளில் இவ்விதமான அப்பட்டமான பொய்களை கட்டவிழ்த்து விடவேண்டாம். ஒரு இரவு மாத்திரமல்ல ஒரு மாதமேனும் விழித்திருந்து மீண்டும் வாசிக்குமாறு சவால் விடுக்கிறேன்.

எமது கொள்கைப் பிரகடனத்தில் 151ஆவது பக்கத்தில் 'சர்வதேச மற்றும் உள்நாட்டு சந்தையை விரிவுபடுத்துதலும் வினைத்திறனும்' என்ற தலைப்பின் கீழ் நாங்கள் 'நிலவுகின்ற சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை இற்றைப்படுத்துதலும் புதிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் பிரவேசித்தலும்' என்றே வலியுறுத்தியிருக்கிறோம்.

ரணில் நீங்கள் வாசித்தது எதனை? பார்க்காமலா சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகளை இல்லாதொழிப்பதாக கூறினீர்கள்? அல்லது வேண்டுமென்றே தவிர்த்துச் சென்றீர்களா? நாட்டில் பொறுப்புக்கூறவேண்டிய ஜனாதிபதி ஒருவர் என்ற வகையில் அறிந்திருந்தும் பொய் கூறவேண்டாம்.

நீங்கள் வெறுமனே ஒரு வேட்பாளர் மாத்திரமல்ல. நீங்கள் இப்போது இந்த நாட்டின் ஜனாதிபதி பதவியை வகிக்கின்ற வேட்பாளர். மக்களை ஏமாற்ற வேண்டாம். சர்வதேச சமூகத்தை ஏமாற்ற வேண்டாம். நிலவுகின்ற வர்த்தக உடன்படிக்கைகளை நடப்பு நிலைமைக்கு இணங்க இற்றைப்ப டுத்துவது மாத்திரமன்றி புதிய வர்த்தக உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆங்கில மொழிபெயர்ப்பில் பக்கம் 84 இல் அது பற்றி மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நாளில் விளங்கா விட்டால் ஒரு வாரமேனும் கண்விழித்து ரணில் நீங்கள் இதனை மீண்டும் வாசியுங்கள்.

## எஞ்சிய ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாக வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மொரட்டுவ வில்லோரவத்த பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே, அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த போதைப்பொருள் தடுப்புக் கட்டளை மையத்தை நிறுவ எதிர்பார்ப்பதுடன், போதைப்பொருள் பற்றிய ஆய்வு, போதைப் பொருளைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள், போதைப்பொருளால் பாதிக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளவர்களின் மறுவாழ்வு உள்ளிட்ட அனைத்து நடவடிக் கைகளையும் இந்த நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம். மேலும், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக தற்போதுள்ள சட்டங்களைவிட கடுமையான சட்டங்களை அமுல்படுத்தவும் எதிர்பார்க்கிறோம்.

எமது பொருளாதாரத்திற்கு தற்போதைய கடன் சுமையைத் தாங்க முடியாது எனவும், பொருளாதாரம் வீழ்ச்சியடையும் எனவும் நான் இந்த நாட்டை பொறுப்பேற்றபோது சர்வதேச நாணய நிதியம் அறிவித்திருந்தது. எம்மால் கடனை திருப்பிச் செலுத்த முடியவில்லை. கடன் நிலைபேற்றுத்தன்மை இழந்திருந்தோம். அதன்படி, கடனைச் செலுத்துவதற்கு கடன் நிலைபேற்றுத் தன்மையை நிறுவ வேண்டியிருந்தது.

கடன் பெறுவதையும் பணம் அச்சிடுவதையும் நிறுத்த வேண்டி ஏற்பட்டது. அரச வங்கிகளில் கடன் பெற வேண்டாம் என்றும் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அந்த வங்கிகளுக்கு நிதி மூலதனத்தைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. இந்த நிலையைக் கருத்திற் கொண்டு அரச வருமானத்தை அதிகரிக்க ஏயுவு வரியை உயர்த்த வேண்டியிருந்தது.

இது மிகவும் கடினமான முடிவாக இருந்தது. ஆனால் அது பயன் தரும் என்று எங்களுக்குத் தெரியும். வற் வரியை அதிகரித்து, வருமான வரி முறையையும் மாற்றினோம். இதன் பிரதிபலன்கள் தற்போது கிடைத்துள்ளன. அதற்கேற்ப, நாட்டின் வருமானம் அதிகரித்தபோது, ரூபாவின் பெறுமதி வலுப்பெற்றது. 370 ரூபாயாக இருந்த டொலர் 300 ரூபாயாகக் குறைந்தது. இதனால் பொருட்களின் விலைகள், பெற்றோல், டீசல் உள்ளிட்ட எரிபொருட்களின் விலை படிப்படியாகக் கணிசமாகக் குறையத்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர்
Kalaikkathir

# நுவரெலியா மாவட்டத்தில் 2 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்கு வித்தியாசத்தில் சஜித்பிரேமதாஸ வெல்வார்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. ஆரூடம்




(க.கிஷாந்தன்)

ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிரேமதாஸவை நுவரெலியா மாவட்டத்தில் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைப்போம்என்றுமலையகமக்கள்முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானஇராதாகிருஷ்ணன்தெரிவித்தார்.

ஐக்கியமக்கள்கூட்டணியின்சார்பில்,ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, நுவரெலியா – தலவாக்கலையில் ஞாயிற்றுக்கிழூமை மதியம் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

இதில்உரையாற்றும்போதேஇராதாகிருஷ்ணன் இவ்வாறு தெரிவித்தார்.

எமது நாட்டில் இதுவரை எட்டு ஜனாதிபதிகள் உருவாகியுள்ளனர்.அவர்களுக்கிடையில் மாறுபட்ட கொள்கையே இருந்துள்ளது. தான் சிங்கள, பௌத்த வாக்குகளால்தான் ஆட்சிக்கு வந்ததாக ஒருவர் கூறினார். தமிழர்களையும் அரவணைத்துக்கொண்டே பயணிக்க வேண்டும்எனமற்றுமொருவர்கூறினார். இப்படி மாறுபட்ட நிலைப்பாடுகள் காணப்பட்டன. ஆனால்அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு பயணிக்கக்கூடிய ஒரே தலைவர் சஜித் பிரேமதாசதான். இதனைநாட்டுமக்களும் நிச்சயம் உணரவேண்டும்.

சஜித்துடன் நாம் ஐந்தாண்டுகள் இணைந்துபயணிக்கின்றோம்.அவர்இனவாதமற்ற தலைவர் என்பதை எமக்கு அறியமுடிகின்றது. ஒரு சிலர் வடக்குக்கு சென்றால் ஒரு விடயத்தையும், தெற்கில் மற்றுமொரு விடயத்தையும் குறிப்பிடுகின்றனர்.ஆனால்அனைத்துபகுதிகளிலும் செய்யக்கூடிய விடயங்களை சொல்லும் தலைவராக சஜித் காணப்படுகின்றார். அனைத்து இன மக்களையும் சமமாக பார்க்கக்கூடிய தலைவராகவும் அவர் உள்ளார். அதனால் அடிப்படையிலேயே நாம் சஜித்தை ஆதரித்தோம்.

சஜித்தை நாம் வெறுமனே ஆமாம் சாமி போட்டு ஆதரிக்கவில்லை. 47 கோரிக்கைகள்முன்வைக்கப்பட்டுள்ளன. இவற்றைஅவரும்ஏற்றுக்கொண்டுள்ளார். லயன்களை வெறுமனே கிராமங்களாக மாற்றுவதில் தீர்வு கிட்டப்போவதில்லை.

சஜித் ஆட்சியில் மலையகத்தில் நாம் நிச்சயம் மாற்றத்தை ஏற்படுத்துவோம். மக்களை அச்சுறுத்தி வாக்கு பெறும் முயற்சியில் அநுரகுமார திஸாநாயக்க ஈடுபட்டுவருகின்றார்.

சஜித்தைவிடவும் அநுர முன்னிலையில் இருக்கின்றார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். அநுரவை வெற்றிபெற வைப்பதே ஜனாதிபதியின் நோக்கம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். ரணசிங்க பிரேமதாசதான் எமது மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கினார். – என்றார்.

(05)

# மலையக மக்களுக்கு தேவையான அனைத்து உரிமைகளையும் சஜித் மூலம் பெறுவோம்

## திகாம்பரம் சூளுரை



மலையகமக்களுக்குதேவையானஅனைத்து உரிமைகளையும் சஜித் ஆட்சியில் நாம் நிச்சயம் பெறுவோம். காணி உரிமை மற்றும் வீட்டுத் திட்டம் என்பன நிறைவு செய்யப்படும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து, நுவரெலியா–தலவாக்கலையில்ஞாயிற்றுக்கிழமை மதியம் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலே நாட்டின் தலைவிதியைநிர்ணயிக்கப்போகின்றதேர்தலாகும்.

சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவரும் பிரதான வேட்பாளர்களாக உள்ளனர். இவர்களில் நாம் சஜித் பிரேமதாவை ஆதரிக்கினறோம். சஜித் பிரேமதாச என்பவர் நேர்மையான தலைவர். அவர் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றக்கூடியவர்.

சஜித்ஆட்சியில்நாம்நிச்சயம்அமைச்சராவோம். எமது மக்களுக்கு தேவையான உரிமை மற்றும் அபிவிருத்திகளை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம்.

நான் மடக்கும்புர தோட்டத்தில் பிறந்த ஒரு தோட்டத் தொழிலாளியின் பிள்ளை. எனவே, எமது மக்களின்கஷ்டம்எமக்குதெரியும். சஜித் ஆட்சியில் குறுகிய காலப்பகுதிக்குள் மலையக வீட்டுத் திட்டம் நிறைவுசெய்யப்படும்.

சஜித்ஆட்சிக்குவந்தால் எமக்கு காணி தருவார் . எனவே, 2 லட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளால் நுவரெலியாமாவட்டத்தில் சஜித் பிரேமதாசவை வெற்றிபெறவைப்போம். சஜித் இனவாதமற்ற, மதவாதமற்ற தலைவர். அவர் ஜனாதிபதியானால் அனைவருக்கும் சேவைகளை செய்வார். ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாடம் புகட்டுவோம். – என்றார். (05)

# சஜித் பிரேமாதாஸவை ஆதரித்து தலவாக்கலையில் பிரசார கூட்டம்



(க.கிஷாந்தன்)

ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும், எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து, நுவரெலியா – தலவாக்கலையில் ஞாயிற்றுக்கிழமை மதியம் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் ஜனாதிபதிவேட்பாளர் சஜித் பிரேமதாஸ, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்மனோகணேசன், பிரதிதலைவர்களான வே.இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம், உதயகுமார், நாடாளுமன்ற உறுப்பினர்களான மயந்த திசாநாயக்க,நளின்பண்டார,சுஜீவசேனசிங்க, நுவரெலியா மாவட்ட அமைப்பாளர்களான ஹிரன்யா ஹேரத்,அசோக சேபால உட்பட பலரும்பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்றனர்.(05)

# சஜித் பிரேமதாஸவை ஆதரித்து சாய்தமருதில் பொதுக்கூட்டமும், காரியாலய திறப்பு விழாவும்







(எம். எப்.றிபாஸ்)

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து ஐக்கிய மக்கள்சக்தியின்தேர்தல்நடவடிக்கைகள் காரியாலய திறப்பு விழாவும், பொதுக்கைட்டமும் சாய்ந்தமருதுதில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.



கல்முனை மாநகர சபையின்முன்னாள்முதல்வரும், ஸ்ரீ ல.மு.காங்கிரஸ் கட்சியின், சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் அவருடைய இல்லத்தில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் மு.கா. கட்சியின் தலைவ ரும், நாடாளுமன்ற உறுப்பி னருமான ரவூப் ஹக்கீம் பிரதம அததியாவும், நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரிஸ்.பைசால் காசிம் கட்சியின் தவிசாளர் எம்.அப்துல் மஜீத், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெவ்வை, கட்சியின் பொருளாளர் ரஹ்மத் மன்சூர் உட்பட சாய்ந்தமருது மத்திய குழு உறுப்பினர்கள், பெண்கள், ஆண்கள் என பெரும் திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# கீழ்த்தரமான முயற்சி

அரசுத் தலைவர் தேர்தலையொட்டி புதிய சர்ச்சை ஒன்று வெடித்துள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஆளும்தரப்பினர் நடந்துகொண்ட முறைகேடான விடயமே இப்போது அம்பலத்திற்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

தபால் மூல வாக்களிப்பு தொடங்குவதற்குச் சற்று முன்னதாக, அரச பணியாளர்களுக்கு 2025 தை மாதம் முதல் சம்பள அதிகரிப்பு வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதித்ததுஎன்றுஆளும்தரப்புத்தகவல்வெளியிட்டது. இது ஊடகங்களிலும் பெரும் பரப்புரையைப் பெற்றது. ஆளும் தரப்பின் இந்தச் செயல் தேர்தல் விதியை மீறி, ஒரு வேட்பாளருக்கு ஆதாயம் தேடித்தரும் விதத்தில் அமைந்தது என்று அதற்கெதிராகப் பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. தேர்தல் ஆணைக்குழுவும்கூட அது தவறான செயல்தான் என்று ஏற்றுக்கொண்டது.

இப்போது, அப்படிப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவேயில்லை என்று தேர்தல் ஆணைக்குழு உறுதிப்படுத்தியிருக்கின்றது. அப்படி ஒரு அமைச்சரவைத்தீர்மானம்எடுக்கப்பட்டதற்குஆதாரமாக எந்தவொரு ஆவணமும் ஆளும் தரப்பினரிடம் இல்லை என்று ஆணைக்குழு கூறுகின்றது.

இந்த விவகாரம் தொடர்பாக பல்வேறு கட்சிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் பலமுறை புகார் அளித்துள்ளன. விசாரணைகளுக்குப் பின்னர் பதிலளித்த தேர்தல் ஆணைக்குழு, இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் எதுவும் இல்லை என்று உறுதி செய்தது.

ஆணைக்குழுவின் தலைவர் ஆனந்த ரத்நாயக்க, அனைத்து முறைப்பாடுகளும் சட்டத்திற்கு உட்பட்டு தீர்க்கப்படும் என்று உறுதியளித்ததுடன், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதிசெய்வதற்கு ஆணைக்குழுவின் அர்ப்பணிப்பை வலியுறுத்தினார். தேர்தல் சட்டத்தை மீறுவதற்கு எந்தவொரு கட்சிக்கும் இடமளிக்கப்பட மாட்டாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

உத்தேசசம்பளஅதிகரிப்புதொடர்பானஅமைச்சரவைப் பத்திரம் எதுவும் இல்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர்ரோஹனஹெட்டியாராச்சியும் உறுதிப்படுத்தியுள்ளார். இந்தச் சம்பள அதிகரிப்பு அறிவிப்புகள் தொடர்பில் பவ்ரல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடுசெய்துள்ளதாகவும்அவர்தெரிவித்துள்ளார்.

சம்பள அதிகரிப்பு மற்றும் விவசாயக் கடன் தள்ளுபடி உள்ளிட்ட அமைச்சரவைத் தீர்மானங்களின் காலக்கெடு தேர்தல் சட்டங்களின் அப்பட்டமான மீறல் என ஹெட்டியாராச்சி விமர்சித்தார், குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல் வரவுள்ள சூழலில். முக்கியமான தேர்தல் காலத்தில் வாக்காளர்களை ஏமாற்றும் ஆளும்தரப்பின் முயற்சிகள் என்று முத்திரை குத்தி, இந்த அறிவிப்புகளால் பொதுமக்கள் தவறாக வழிநடத்தப்பட வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இப்படி ஒரு அமைச்சரவைத் தீர்மானம் இன்றியே அரச பணியாளர்களைத் தவறாக வழிநடத்தி அவர்களின் வாக்குகளைக் கவரும் வகையில் செயற்பட்டதன் மூலம் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது ஆளும்தரப்பு ஆதரவாளர்களும் மிகவும் கீழ்த்தரமாக நடந்துகொண்டிருக்கிறார்கள். இது தேர்தல் விதி மீறல் மட்டுமன்றி அதிகாரத் துஸ்பிரயோகமும்கூட. மன்னிக்கப்படமுடியாத, ஏற்றுக்கொள்ளப்படமுடியாத இந்த நடவடிக்கைக்காக ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழு தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியம்.

மக்களை ஏமாற்றி வாக்குகளைக் கவரும் அவரது உத்திக்காக அவரது தேர்தலில் போட்டியிடும் தகுதியையே பறிக்கவேண்டும்.

# தைவானை ஆக்கிரமிக்குமா சீனா?



**நாகா**

"தைவான் தீவு சீனாவின் ஒரு பகுதி. அந்தத் தீவை எப்போது வேண்டுமானாலும் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு எங்களுக்கு உரிமைஉள்ளது. அதற்காகஇராணுவவலிமையைப் பயன்படுத்தவும் தயங்கமாட்டோம்!"

தைவான் குறித்து சீன அதிபர் ஷி ஜின்பிங் அடிக்கடி கூறுவது இது. தங்கள் நாட்டின் ஒரு பிரதேசமாக தைவானைக் கருதுவதால்தான் அந்தத் தீவை தனி நாடாக அங்கீகரிக்கும் வகையில் அங்கு எந்த நாடாவது தூதரகத்தை அமைத்தாலோ, வெளிநாட்டுத் தலைவர்கள் வருகை தந்தாலோ சீனா மிகக் கடுமையாக ஆட்சேபிக்கிறது.





சொல்லப்போனால், இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு சீனாவும் தைவானும் ஒரே நாடாகத்தான் இருந்தன. போர் முடிவுக்கு வந்ததும், தேசிவாதக் கட்சியான குவோமின்டாங் தலைமையிலான அரசு அதுவரை ஜப்பான் கட்டுப்பாட்டில் இருந்த தைவானை சீனாவுடன் இணைத்துக் கொண்டது. அதற்கு முன்னர் கூட, 1895-ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் சீன- - ஜப்பான் போரில் குவிங் பேரரசு தோல்வியடைந்து, தைவானை ஜப்பானிடம் ஒப்படைத்ததற்கு முன்னர் வரை அந்தத் தீவு சீனாவின் ஓர் அங்கமாகத்தான் இருந்தது.

கடந்த 1950-இல் நிறைவடைந்த சீன உள்நாட்டுப் போரில் மா சேதுங் தலைமையிலான கம்யூனிஸ்ட் படையிடம் தோல்வியடைந்த குவோமின்டாங் அரசுப் படைகள் தைவானுக்குத் தப்பி வந்த பிறகுதான் சீன பெருநிலம் கம்யூனிஸ்ட் கட்டுப்பாட்டுக்கும் தைவான் தீவு குவோமின்டாங் படையினரின் கட்டுப்பாட்டுக்கும் வந்தது. தற்போது தைவான் தனி சுதந்திர நாட்டைப் போல் ஜனநாயக முறையில் செயல்பட்டுவருகிறது. தற்போது மிகப் பெரிய தொழில் வளர்ச்சியடைந்துள்ள அந்தத் பிரதேசத்துக்கு அமெரிக்கா பக்கபலமாக இருந்துவருகிறது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவில் இந்த விவகாரம் நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது. தைவானை சீனா கைப்பற்றுவது நடக்கத்தான் போகிறது என்ற எதிர்பார்ப்பில் அந்தப் பிரதேசத்துக்கு அமெரிக்கா இராணுவ உதவிகளை அளித்து வருகிறது. தைவான் மீது சீனா படையெடுக்கும்போது அதை எதிர்கொள்வதற்கான பாதுகாப்பு வியூகங் களை அமெரிக்க தளபதிகள் அவ்வப்போது புதுப்பித் துவருகின்றனர்.

அவர்களது எதிர்பார்ப்பை நியாயப்படுத்தும் வகையில், தைவானுக்கு அமெரிக்க எம்.பிக்கள் வருவது போன்ற சிறிய சலசலப்பு என்றாலும் அந்தப் பிரதேசத்தை பயமுறுத்தும் வகையில் முப்படைகளால் சுற்றிவளைத்து சீனா போர் ஒத்திகையை நடத்திக் காட்டுகிறது. ஆனால் உண்மையில், தங்கள் மீது படையெடுத்து ஆக்கிரமிக்கும் எண்ணம் இப்போதைய நிலையில் சீனாவுக்கு இல்லை என்று தைவான் இராணுவமே கூறுகிறது.

இது குறித்து இராணுவம் கடந்த வாரம் வெளியிட்ட வருடாந்திர அச்சுறுத்தல் அறிக்கையில், தைவானை ஆக்கிரமிப்பதற்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பைக்கூட தனது இராணுவத்தில் சீனா ஏற்ப டுத்தி வைத்திருக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



தைவான் தொடர்பாக சீனா மேற்கொள்ளும் போர் ஒத்திகைகூட, படையெடுப்புக்கானதுஇல்லை என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தைவானை ஒரேடியாக ஆக்கிரமிப்பதற்குப் பதில், அந்தத்தீவைச்சுற்றிவளைத்து முற்றுகையிடவும் அதன் மூலம் அந்தப் பிரதேசத்துக்கு பொருளாதார நெருக்கடி கொடுத்து அடிபணியவைப்பதுதான் சீனாவின் எதிர்காலதிட்டமாக உள்ளது என்று அந்த அறிக்கையில்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# தைவானை ஆக்கிரமிக்குமா....

4ம் பக்க தொடர்ச்சி...........

தீவிர தேசப்பற்று அல்லது



குறிப்பிடப்ப ட்டுள்ளது.

தைவானை ஆக்கிர மித்தால் அமெரிக்காவின் முழு எதிர்ப்பை சீனா எதிர்கொள்ள வேண்டியிருக்கும். முக்கியமாக, சீனா மீது அமெரிக்கா விதிக்கக்கூடிய பொருளாதாரத் தடைகள் அந்தநாட்டைநிலைகுலையச்செய்யும். ஏற்றுமதியை பெரிதும் சார்ந்துள்ள சீன பொருளாதாரம் சீர்குலையும். அப்படி ஒரு நிலையை சீனா விரும்பவில்லை என்று தைவான் இராணுவத்தின் ஆய்வறிக்கையே தெரிவிக்கிறது.

சீனா நினைத்தால் தைவானை மிக எளிதில் ஆக்கிரமித்துவிட முடியும். ஆனால், அதன் பின்விளைவுகளைத் தாங்கும் நிலையில் சீனா இல்லை என்று நிபுணர்களும் கூறுகிறார்கள்.

இது தவிர, தைவானை ஆக்கிரமிப்பதுசீனகம்யூனிஸ்ட்கட்சியின் ஆட்சிக்கே ஆபத்தாக முடியும் என்று ஒருதரப்பினர்கூறுகின்றனர். ஜனநாயக மற்ற ஒரு நாட்டில் ஆட்சியாளர்கள் நிலைத்திருக்க வேண்டுமென்றால், அதற்கு தொடர் பொருளாதார வளர்ச்சி, அடக்குமுறைஆகியவைஅடித்தளமாக இருக்க வேண்டும். இப்போது சீனாவில் நிலவும் ஸ்திரத்தன்மைக்கு பொருளாதார வளர்ச்சியும் தேசப் பற்றும் அடிப்படையாக உள்ளன. தைவானை ஆக்கிரமிப்பதால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சி மக்களின் எழுச்சிக்குக் காரணமாகக் கூடும். அதைத்தவிர்க்கவேசீனஅரசுவிரும்பும் என்கிறார்கள் இந்த விவகாரத்தை நன்கு அறிந்தவர்கள்.

தைவானை சீனா ஆக்கிரமிக்கும் என்ற எதிர்பார்ப்பில் அமெரிக்கா மேற்கொண்டு வரும் நடவடிக் கைகள் சீனர்களின் தேச உணர்வைத் தொடர்ந்து தூண்டிவருகிறது. இது, கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு மிகப் பெரிய பலமாக இருந்துவருகிறது. எனவே, தைவானை உடனடியாக ஆக்கிரமிக்கப்போவதைப் போன்ற தோற்றத்தை சீனா தொடர்ந்து ஏற்படுத்திவந்தாலும், அது இப்போதைக்கு நடக்காது என்கிறார்கள் நிபுணர்கள்.

# மாலைதீவு வில்லா கல்லூரியுடன் தென்கிழக்கு பல்கலை உடன்பாடு

(எம்.வை.அமீர்)

தென்கிழக்குபல்கலைக்கழகத்துக்கும்மாலைதீவு வில்லா கொலீஜுக்குமிடையே கல்வி மற்றும் வளங்களை பரிமாற்றம் செய்து மாணவர்களுக்கு மிகச்சிறந்த கல்வியை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை தென்கிழக்கு பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் நிகழ்வின் இணைப்பாளர் கலாநிதி ஏ.டப்ளியு. என். நளீபாவின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல் அப்துல் மஜீத் கலந்து கொண்டிருந்தார். அதேவேளை மாலைதீவு வில்லா கொலீஜின் சார்பில் பதில் உபவேந்தர் பங்கு கொண்டிருந்தார்.

இங்கு இரு நிறுவனங்களுக்குமிடையே பரிமாறிக்கொள்ளக் கூடிய கல்வி, வளம் மற்று ஆய்வு நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மாணவர்களுக்கு தரமான கல்வி வழங்கும் திட்டத்தை மேலும் மெருகூட்டும் விதத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் பல்வேறு நாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களுடனும் உயர் கல்வி நிறுவனங்களுடனும் பேச்சுகளை நடத்தி ஒப்பந்தங்களை செய்து கொண்டு கல்வி மற்றும் வள பரிமாற்றங்களை செய்து வருகின்றது.

பொதுநிர்வாக அமைச்சின் உயர் அதிகாரிகளில் ஒருவரான ரஷாத் அஹமதின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பதில் பதிவாளர், பதில் நிதியாளர் மற்றும் பேராசிரியர் கலாநிதி ஏ.எல்.எம்.றியால், பேராசிரியர் கலாநிதி ஐ.எல்.எம்.மாஹிர், பேராசிரியர் கலாநிதி கே. கணேசராஜா கலாநிதி எம்.எம்.பெரோஸ் உள்ளிட்ட பலர் பங்கு கொண்டிருந்தனர்.(05)

# கல்முனை சாஹிரா மாகாண மெய்வல்லுனர் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றுசாதனை




(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டியின் 14 வயது ஆண்கள் பிரிவில் 60 மீட்டர் ஓட்டப் போட்டி நிகழ்ச்சியில் கல்முனை சாஹிராக் கல்லூரி மாணவன் ஏ.ஆர்.எம். றிஹாப் முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துள்ளார்.

இந்தப் போட்டி மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றுக் கொண்டதன் மூலம் தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவாகி கல்லூரிக்கு பெருமையை ஈட்டிக் கொடுத்துள்ள இம்மாணவனுக்குவாழ்த்துக்களையும் பாராட்டையும்தெரிவித்துள்ளபாடசாலை சமூகம்,இவ்வெற்றிக்குஉறுதுணையாய் இருந்துஆலோசனை,வழிகாட்டல்களை வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி முதல்வர் எம்.ஐ. ஜாபிர் மற்றும் பயிற்சிகளை வழங்கிய பாடசாலை உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம். அப்ராஜ் றிழா, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எம்.யூ.ஏ. சம்லி ஆகியோருக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளது.(05)



காலைக்கதிர்
Kalaikkathir

# நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்றை மக்கள் எதிர்பார்க்கின்றனராம்

## ரஹ்மத் மன்சூர் தெரிவிப்பு



(எம். எப். றிபாஸ்)

நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்படவேண்டும். அது சஜித் பிரேமதாஸ, ஆளுகின்ற ஆட்சியாக அமைகின்றபோது, இந்த நாடும் நாட்டு மக்களும் சுபீட்சம் பெற்றவர்களாக மாற முடியும் என கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வரும், கட்சியின் பொருளாளருமான ரஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

கல்முனையில் அவரது கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்ற இளைஞர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில்எமதுகட்சியின்தலைவர் ரவூப் ஹக்கீமுடைய கரத்தை பலப்படுத்துவதன் மூலம் சஜித் பிரேமதாஸவை வெற்றி பெறச் செய்து நாட்டில் ஒரு நல்லாட்சியை ஏற்படுத்த நாம் முன்வர வேண்டும்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி அல்லது

நமது நாட்டையும் நாட்டில் உள்ள வளங்களையும் கையிருப்பில் இருந்த டொலர்களையும் சூறையாடி கொள்ளையடித்த கூட்டத்தையும், இனவாதிகளையும் எதிர்வரும் தேர்தலுடன் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். இவர்கள் தங்களது முகவரியை மட்டும் மாற்றி விட்டு நாட்டை சீரழிக்க ஆட்சி பீடம் ஏற நினைக்கிறார்கள். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்த தேர்தலிலே வெற்றி பெறுவது நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகி இருக்கின்ற நிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இளைஞர்களும் இதனுடன் இணைந்து பயணிக்க வேண்டும்.

எல்லா வகையான வேலைத் திட்டங்களிலும் கொள்ளையடிப்பதையும்சுரண்டுவதையும்நோக்கமாகக் கொண்டிருந்தவர்களால் தான் இந்த நாடு பெரும் பஞ்சத்தை அனுபவித்தது. இதனால் நாட்டு மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல.

இப்படிப்பட்டவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவது இந்த நாட்டு மக்களுக்கு செய்யும் துரோகமாகும்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி அல்லது உதாசீனப்படுத்தி சர்வதேசத்தின் உதவியோடு ஊழல் மோசடி செய்து நாசகார செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெற முயற்சித்தால் அவ்வாறானவர்கள் மீண்டும் ஒரு மக்கள் புரட்சியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் அவர்கள் நாட்டை விட்டு ஓடும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இளைஞர்களாகிய நாம் கிராமம் கிராமமாக, வீடு வீடாக சென்று சஜித் பிரேமதாஸவின் டெலிபோன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு மக்களை திரட்ட வேண்டும். ஊழல் நிறைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து கொள்ளை கும்பலை வீட்டுக்கு அனுப்ப முடியும்.

சிறுபான்மை மக்கள் இனவாத அரசியலால் பட்ட துயரங்களை மறந்துவிட முடியாது. இலங்கையில் 1983 காலப்பகுதியில் கட்டவிழ்த்தபட்ட இனக்கலவரம் ஜேவிபி செய்த அட்டூழியங்களை மறந்து விட முடியுமா?

இந்தத் தேர்தலில் கொள்ளை கும்பலுடன் இணைந்து இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி அடைவதுடன், ஜனநாயகத்தையும் ஜனநாயக ஆட்சியையும் நேசிக்கின்ற சஜித் பிரேமதாஸ அமோக வெற்றி பெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக திகழ்வார் என்பதில் ஐயமில்லை. - எனவும் கூறினார். (05)



# தேசிய மட்ட பைத் போட்டியில் சம்மாந்துறை வலயம் முதலிடம்

(வி.ரி. சகாதேவராஜா)

தேசிய மட்ட முஸ்லிம் கலாசார போட்டியில் மர்ஹபா பைத் நிகழ்ச்சியில் சம்மாந்துறை வலய இறக்காமம் அல் அஷ்ரப் மத்திய கல்லூரி தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

இச் சாதனையை சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ்.மகேந்திரகுமார் பாராட்டியுள்ளார்.

இப்பாரிய வெற்றியை பெற்ற மாணவர்களை வாழ்த்துவதுடன் இப்போட்டியை இறுதிவரை வழிநடாத்திய உதவி அதிபர் ஏ.எம.;எஸ். இர்பானாக்கும் பாடசாலையின் அதிபருக்கும் ஏனைய வழிப் படுத்திய ஆசிரியருக்கும் வலயம் சார்பாக இஸ்லாம் பாட வளவாளர் மௌலவி ஏஜேஎம்.அஷ்ரப்( பலாஹி) நன்றிகள் தெரிவித்தார். (05)

# அக்கரைப்பற்றில் கஞ்சாவுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதையடுத்து, அவரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி அப்பிரதேசத்துக்குச் சென்ற பொலிஸார் சந்தேக நபரை சனிக்கிழமை கைது செய்து, அவரிடமிருந்த 58,270 மில்லிகிராம் கஞ்சாவை கைப்பற்றியிருந்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் அக்கரைப்பற்று பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# பாக்குமரம் வெட்டிய இளைஞன் தவறி விழுந்து உயிரிழப்பு



பாக்குமரம் ஏறி பாக்குமரத்தின் நுனிப்பகுதியை வெட்டிக் கொண்டிருந்த இளைஞன் ஞாயிற்றுக்கிழமை மாலை தவறி கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

16வயதுடையகல்பொத்தபதனபரமங்கட பசறை பகுதியை சேர்ந்த இளைஞனே உயிரிழந்துள்ளார்.

வீட்டுக்கு அருகில் உள்ள பாக்கு மரத்தை வெட்டுவதற்காக குறித்த இளைஞன் பாக்கு மரத்தில் ஏறி நுனிப்பகுதியில் இருந்து மரத்தை வெட்டும் போது மரத்தில் இருந்து தவறி கீழே விழுந்து பலத்த காயமடைந்த நிலையில் பசறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, அங்கு அதி தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பதுளை பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களுக்கு முக்கிய அறிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள் தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையைபெற்றுக்கொள்ளமுடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையை மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்காலிகவாக்காளர்அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கு தங்களது பிரதேசங்களில் உள்ள கிராம அலுவலகர் அல்லது தோட்ட கண்கா ணிப்பாளர் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

(05)

# வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்கத்தினர் ஜெனீவா பயணம்



ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்காக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க செயலாளர் லீலாதேவி ஆனந்த நடராஜா உட்பட சங்கத்தின் பிரதிநிதிகள் ஞாயிற்றுக்கிழமை ஜெனீவாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர்.

ஜெனீவாவிற்கு விஜயம் மேற்கொண்ட குழுவில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்க உபசெயலாளர் மற்றும் வவுனியா மாவட்ட தலைவி ஆகியோர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# உண்ணி மூலம் மனிதர்களுக்கு வைரஸ் மூளையைப் பாதிக்கும் பெரும் ஆபத்து

## சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டது

மனித மூளையை பாதிக்கும் புதிய வைரஸ் சீனாவில் கண்டறியப்பட்டுள்ளது.

உண்ணி மூலம் மனிதர்களுக்கு பரவும் இந்த வைரஸை 'வெட்லேண்ட் வைரஸ்' என்று விஞ்ஞானிகள் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

சீனாவின் ஜின்ஜுவில் உள்ள ஈரநிலப் பூங்காவில் பணிபுரிந்த 61 வயது முதியவர் ஒருவரிடம் இந்த வைரஸ் முதலில் கண்டறியப்பட்டது.

இந்த வைரஸால் பாதிக்கப்பட்ட பிறகு மனித மூளை தொடர்பான கடுமையான உடல்நலக் கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)




காலைக்கதிர் Kalaikkathir

## எஞ்சிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கியது.

ஆனால் ஒரு பிரச்சினை இருந்தது. 2019 இல், டொலர் 185 முதல் 190 ரூபா வரை இருந்தது. அதற்கேற்ப பொருட்களின் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. டொலர் மதிப்பு 370 ரூபாவாக உயர்ந்தபோது, அதற்கேற்ப பொருட்களின் விலையும் உயர்ந்தது. ஆனால் மக்களின் வருமானம் அதிகரிக்கவில்லை. வரி விதிப்பால், வருமானம் மேலும் குறைந்தது. எனவே, மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுத்தோம். முதலில், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்காக 'அஸ்வெசும' திட்டத்தை செயல்படுத்தினோம்.

பயனாளிகளின் எண்ணிக்கை 24 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 2024 இல் வருமானம் அதிகரிக்கும் போது அரச ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கவும் நாங்கள் பணியாற்றினோம். 2024 பட்ஜெட்டில் 10,000 வழங்கப்பட்டது. வரும் ஆண்டில் இருந்து உதய ஆர். செனவிரத்ன குழுவின் அறிக்கை அமுல்படுத்தப்படுகிறது. எனவே, 2025- - 2026 காலகட்டத்தில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் இரண்டும் அதிகரிக்கும். எனவே, இப்பணியை தொடர்வதா, வேண்டாமா என்பதை இந்த தேர்தலில் முடிவு செய்ய வேண்டும்.

ஏற்றுமதி பொருளாதாரமாக மாறுவதே எங்கள் நோக்கம். அரசும் தனியார் துறையும் இணைந்து 100,000 வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் எதிர்பார்க்கிறோம். வெளிநாட்டு வேலைகளுக்கு விண்ணப்பிக்கும் 50,000 பேருக்கு பயிற்சிக்கான உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் எமது மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்தல், எதிர்வரும் வருடத்தில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குதல், விவசாய நவீனமயமாக்கல், புதிய முதலீட்டு வலயங்களை உருவாக்குதல், டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்குதல் ஆகிய அனைத்தும் 'இயலும் ஸ்ரீ லங்கா' திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

வங்குரோத்தான ஒரு நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர ஏனைய நாடுகளுக்கு பத்து - பதினைந்து வருடங்கள் ஆனது. ஆனால் 2027இற்குள் இந்தப்பணியை முடிக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. ஏனைய வேட்பாளர்களால் இந்த நடவடிக்கைகளை செய்ய முடியுமா என்ற கேள்வி உள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி இரண்டு கொள்கை பிரகடனங்களைக் கொண்டுள்ளது. நாலக கொடஹேவாவின் 'செமட ஜயக்' விஞ்ஞாபனமும் மற்றைய குழுவின் புளூ பிரின்ட் (யயிற்ள ஊணஷஷ்ஜமி 3.0) அறிக்கையும் உள்ளன.

எமது நாட்டு வர்த்தகர்கள் ஏற்றுமதி பொருளாதாரத்தில் கவனம் செலுத்தி எமது உற்பத்திகளை இந்தியாவிற்கும் ஆபிரிக்காவிற்கும் ஏற்றுமதி செய்ய வேண்டும் என எனது நண்பர் தேசிய மக்கள் கட்சியின் அனுரகுமார திஸாநாயக்க அண்மையில் கூறியிருந்தார். அதனால் அவர்கள் எங்கள் திட்டத்தைபின்பற்றுவது எனக்கும் மகிழ்ச்சியாக உள்ளது. ஆனால் இலங்கை இதுவரை செய்து கொண்ட அனைத்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளும் இரத்துச் செய்யப்படும் என்று அவர்களின் விஞ்ஞாபனம் கூறுகிறது. சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் இல்லாமல் ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்குவது எப்படி?

அத்துடன், இந்த நாட்டை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றும் பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்திற்கு எதிராக சுனில் ஹந்துன்நெத்தி நீதிமன்றம் சென்றார். ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்குவது அரசியலமைப்புக்கு எதிரானது என்றார். இறக்குமதி கைத்தொழில் அடிப்படையிலான பொருளாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மொறவக்க பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றின் போது, இது குறித்து அவரிடம் வினவினேன். அதற்கு அவர் பதில் சொல்லவில்லை. மத்திய வங்கி மோசடி குறித்து பதில் தகவல் சொல்கிறேன் என்றார். அது பொருத்தமானதல்ல.

யாழ்ப்பாணத்திலும் இது பற்றி பேசியிருந்தார். ஏற்றுமதி பொருளாதாரம் பற்றி கேள்விகேட்டால் மத்தியவங்கிமோசடிகுறித்துப் பேசுகிறார்கள். அதற்காக இன்று நடைபெற்ற இளையோருடனான சந்திப்பொன்றிலும் என்னைத் திட்டித் தீர்த்திருந்தார். ஆனால் தேசிய ஒற்றுமைக்கு தயார் என்று அவர் கூறியிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இருந்தாலும் நான் கேட்கும் கேள்விகளுக்கு அவர் பதிலளிப்பதில்லை.

தேர்தல்காலங்களில் மற்றையகட்சிகளிடம் கேள்விகள் கேட்கப்படுவது வழமை. அந்த கேள்விகள் சில சமயங்களில் விவாதம் வரையில் சென்றுள்ளன. பிணைமுறி மோசடி தொடர்பில் தேடிப்பார்க்க நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றும், ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டன. நானும் அதில் தொடர்புபட்டிருப்பதாக சொல்லப்பட்டதால் ஆணைக்குழுவில் வாக்குமூலம் வழங்கியிருக்கிறேன். இறுதியில் நான் அதில் தொடர்புபடவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது.

அதனுடன் தொடர்புபட்டவர்களுக்கு உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழங்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் ஆளும்தரப்பு இந்தவழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு கொண்டுச்சென்றது. அங்கும் வழக்கு நிராகரிக்கப்பட்டது. தற்போதும் ஆளும்தரப்பினால் வழக்கு உயர்நீதிமன்றிற்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

தேவைப்படும் பட்சத்தில் அனுரகுமார திசாநாயக்கவின் சட்டத்தரணியும் உயர்நீதிமன்றத்திற்குச் செல்ல முடியும். நடந்த உண்மை என்னவென்று அவர்களுக்கு புரியவில்லை. இந்நாட்டில் மோசடியை ஒழிக்க எம்மால் முடியும் அதற்கான சட்டத்தையும் நாமே நிறைவேற்றினோம் - என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## 51% வாக்காளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14 வரை தபால் ஊழியர்களின் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன.

செப்டெம்பர் 14 வரை வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாத வாக்காளர்கள் இருந்தால், தமக்கு கடிதங்களை விநியோகிக்கும் அலுவலகத்தில் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட 12 அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணையின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 100 மில்லியன் ரூபாவும் முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு தலா 75 மில்லியன் ரூபாவும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோவுக்கு 50 மில்லியன் ரூபாவும் முன்னாள் தேசிய புலனாய்வுத் தலைவர் சிசிரவுக்கு 75 மில்லியன் ரூபாவும் செலுத்த உத்தரவிடப்பட்டது.

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன இதுவரையில் தனது இழப்பீட்டைச் செலுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சஜித்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கோரிக்கை விடுத் துள்ளார். இதன்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளருக்கு ஆதரவளிக்கப் போகிறர் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## கீதா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரப்புரைக் கூட்டத்தில் பங்கேற்ற அவர் தனது ஆதரவை சஜித் பிரேமதாசவுக்கு வழங்குவதாகத் தெரிவித்தார்.

இவர் சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ரணிலே....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூற்றுக்கள் வடக்கு மக்களை அச்சுறுத்துவதாக அமைந்துள்ளன. அதாவது தனக்கு வாக்களிக்காது விட்டால் "நாங்கள் பார்த்துக்கொள்வோம்" என்று அவர் கூறுகின்றார். அவருடைய அச்சுறுத்தும் கூற்றுக்களை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன் என்றும் அதற்காக வடக்கு மக்களிடமும் சிங்கள மக்களைப் தவறானவர்களாகச் சித்தரித்தமைக்காக அவர்களிடமும் அநுர மன்னிப்புக்கேட்கவேண்டும் என்றும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தருந்தார்.

அது தொடர்பிலேயே விஜித ஹேரத் சீற்றத்துடன் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தோழர் அநுர திசாநாயக்கவை மன்னிப்பு கோருமாறு ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்.

ரணில் விக்கிரமசிங்க நீங்கள்தான் இப்போது மன்னிப்புக்கோர வேண்டும். இந்தக் கொள்கைப் பிரகடனத்தைக் கபடத்தனமான முறையில் மாற்றியமைத்து பொய்கூறுதல் சம்பந்தமாக நாட்டு மக்களிடம் மன்னிப்புகோரவேண்டும். நாடு மாத்திரமல்ல சர்வதேச சமூகமும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக அவரையே நியமித்துக் கொண்டுள்ளது.

அநுர வடக்கிற்கு சென்று மக்களிடம் மிகவும்தெளிவாக முழுநாடுமே ஒன்றுசேர்ந்து நாட்டை கட்டியெழுப்புகின்ற கொள்கையை வெற்றியீட்டச் செய்விக்க ஒன்று சேருமாறே கேட்டுக்கொண்டார். தெற்கில் உள்ள மக்கள் வெற்றிக்காக அணிதிரண்டுள்ள நேரத்தில் அந்த வாய்ப்பினை வடக்கிலுள்ள மக்கள் கைவிடவேண்டாம் என்றே அவர் வலியுறுத்தினார்.

தெற்கில் உள்ள மக்களின் ஒத்துழைப்பு மாத்திரம் போதாது. வடக்கு, கிழக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர், மலாயர் ஆகிய அனைத்து இனங்களினதும் ஒத்துழைப்பு நாட்டை கட்டியெழுப்ப அவசியமெனவும் ஒற்றுமை நிறைந்த ஒரு நாட்டை கட்டியெழுப்ப ஒற்றுமை நிறைந்த அரசாங்கமொன்று அவசியமெனவும் வலியுறுத்தினார்.

எனினும் ரணில் வேண்டுமென்றே அதனைதிரிபுபடுத்தி இனவாதக்கூற்றொன்றை வெளியிட்டுள்ளார். 1981 அபிவிருத்திச் சபை தேர்தலின்போது சிறில் மத்தியு, காமினி ஜயவிக்கிரம பெரேரா, காமினி திஸாநாயக்க ஆகியோர் காடையர்களை நெறிப்படுத்தி குருணாகலில் இருந்து அனுப்பிவைத்த காடையர்கள் வாக்குப்பெட்டிகளை கொள்ளையடித்து, அழித்து, தெற்காசியாவின் மிகப்பெரிய நூலகத்தை தீக்கிரையாக்கிய வரலாறுதான் இருக்கிறது.

குருணாகலிலிருந்து புகையிரதத்தில் சென்று இந்துக்கல்லூரியில் தங்கியிருந்து இரவு 10.00 மணிக்கு அமைச்சர்கள் அறிவுறுத்தல்வழங்கியமைபற்றியநேரடியான சான்றுகள் இன்னமும் இருக்கின்றன. அன்று யாழ். நூலகத்திற்கு தீமூட்டி வாக்குகளை கொள்ளையடித்ததால்தான் போரிற்கு வழிசமைக்கப்பட்டது.

நாட்டைத் தீக்கிரையாக்குகின்ற இனவாதத்திற்கு வழிசமைத்தது 81 இல் மேற்கொண்ட இந்த நாசகார செயலாகும். அவ்வாறுநடந்துகொண்டரணில்விக்கிரமசிங்க உள்ளிட்ட ஆட்சியாளர்கள் இன்று அநுர தோழரின் உரையினை திரிபுபடுத்தி வேறு கூற்றுக்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

எங்களுடைய கொள்கை பிரகடனத்தை கருத்தோன்றிய வகையில் திரிபுபடுத்துதல் மற்றும் மீண்டும் இனவாதத்தை தூண்டுவதற்கான கூற்றுக்களை மேற்கொள்ளல் சம்பந்தமாக ரணில் விக்கிரமசிங்க மன்னிப்புக்கோர வேண்டும். நெறிமுறைசார்ந்த அரசியல் நடைமுறை இருக்குமாயின் அதனை நீங்கள் நாட்டுக்கு வெளிப்படுத்திக்காட்ட வேண்டும் என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir



# விசா விவகாரத்தால் இலங்கை சுற்றுலாத்துறைக்கு ஆபத்து வீதிக்கு இறங்கப்போவதாக தொழில்துறையினர் எச்சரிக்கை

இலத்திரனியல் பயண அங்கீகார முறைமையை மீண்டும் செயற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக இலங்கை சுற்றுலாத்துறை குளிர்காலத்தில் வீழ்ச்சியை சந்திக்கலாம் என சுற்றுலாத்துறையை சேர்ந்தவர்கள் எச்சரித்துள்ளனர்.

தற்போதைய விசா நடைமுறை சர்வதேச பயணிகளிற்குபெரும்அசௌகரியத்தைஏற்படுத்தியுள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளபடி அரசாங்கம் இலத்திரனியல் பயண அங்கீகார முறையை நடைமுறைப்படுத்தாவிட்டால் வீதிக்கு இறங்கப்போவதாக சுற்றுலா தொழில்துறையின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

குடிவரவுதுறையினர்தாங்கள்நடைமுறைப்படுத்தும் சர்ச்சைக்குரிய விஎஸ்எவ் குளோபல் முறைஷ்யை இடைநிறுத்திவிட்டு முன்னையை முறைமையை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனினும் இதனை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம் சுற்றுலாத்துறைக்கு பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ள சுற்றுலாத்துறையைசேர்ந்தவர்கள்,சுற்றுலாப்பயணிகள் கொழும்பு விமானநிலையத்தில் விசாவை பெறுவதற்கு இரண்டுமணித்தியாலங்களிற்கு மேல் செலவிடவேண்டியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கையை சென்றடைந்ததும் சுற்றுலாப்பயணிகளிற்குவிசாவழங்கப்படுமாஎன்பதுகுறி;த்தசந்தேகம் காரணமாக இலங்கைக்கு செல்லும் பயணிகளை ஏற்றுவதற்கு சர்வதேச விமானச்சேவைகள் தயக்கம் காட்டுகின்றன எனவும் சுற்றுலாத்தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.

குளிர்காலம் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது,சுற்றுலா தொழில்துறை ஏற்கனவே பலவீனமான நிலையில் உள்ளது,இந்த தாமதங்கள் காரணமாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போக்குவரத்து எச்சரிக்கையை விடுக்கலாம், பிரான்சும் அவுஸ்திரேலியாவும் ஏற்கனவே அவ்வாறான எச்சரிக்கையை விடுத்துள்ளன என இலங்கை ஹோட்டல்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஹிரான் குரே செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

எங்கள் தொழில்துறை தற்போது மோசமான நிலையில் உள்ளது,இது வேதனையளிக்கின்றது ஏனென்றால்,பல வருட சவால்களிற்கு பின்னர் இந்த தொழில்துறையை உயிர்ப்பிப்பதற்கு நாங்கள் கடும் முயற்சிகளில் ஈடுபட்டோம், என மேலும் தெரிவித்துள்ள அவர் அரசாங்கம் சுற்றுலாத்துறையை கையாளும் விதம் இதுவென்றால் இது மிகவும் ஏமாற்றமளிக்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.

குடிவரவு குடியகல்வுதிணைக்களத்தின் பணிப்பாளர் ஹர்ச இலுக்பிட்டிய மீது சுற்றுலா தொழில்துறையினர் கடும் குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளனர்.

அவர் தொழில்நுட்பம் உட்பட பல்வேறு காரணங்களைமுன்வைத்துநீதிமன்றத்தின்உத்தரவை நடைமுறைப்படுத்துவதை தவிர்க்கின்றார் என சுற்றுலாத்தொழில்துறையினர் தெரிவித்துள்ளனர்.(05)

# வவுனியா குடிவரவு – குடியகல்வு திணைக்களம் முன் பெரும் அவதி







கடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காக வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு முன் 15 நாள்களுக்குமேலாக இரவுபகலாக குழந்தைகளுடன் பொது மக்கள் காத்திருக்கும் பெரும் அவலம் நிகழ்கிறது என பாதிக்கப்பட்டுள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கழிவு வாய்க்காலின் மிக மோசமான துர்நாற்றம், நுளம்பு கடி தொல்லை, பாம்புகளின் நடமாட்டம் என பெரும் அவலத்திற்கு முகம் கொடுத்து வாரக்கணக்கில் இரவு பகலாக படுக்கை விரிப்புக்களை விரித்து படுத்து உறங்குவதாகவும், தெரிவித்துள்ள பொது மக்கள், இந்த பெரும் அவலத்திற்கு விரைவில் தீர்வு காணுமாறு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாள் ஒன்றுக்கு 60 கடவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் நூற்றுக்கணக்கான பொது மக்கள் இவ்வாறு 15 நாள்களுக்கு மேலாக வரிசையில் நிற்கின்றனர். (05)

# ஜா எல பகுதியில் ரயில்–கார் விபத்து

ஜாஎல பிரதேசத்தில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் புத்தளத்தில் இருந்து கல்கிஸ்ஸை நோக்கிப்பயணித்தரயிலில்மோதிகார் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளதாக ஜாஎல பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து இடம்பெற்ற போது ரயில் கடவையில் உள்ள பாதுகாப்பு மின் சமிக்ஞைகள் செயலிழந்திருந்துள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தின் போது, காரினுள் 5 பேர் பயணித்துள்ள நிலையில் உயிர்சேதம்எதுவும்ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் கார் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# பாடசாலை மாணவி மீது பாலியல் துஷ்பிரயோகம்

## சக மாணவன் கைது

மொனராகலை, தணமல்வில பிரதேசத்தில்உள்ளபிரபலபாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அதே பாடசாலையில் கல்வி கற்கும் சக மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளார்எனதணமல்வில பொலிஸார் தெரிவித்தனர்.

தணமல்வில பொலிஸாருக்கு கிடைத்ததகவலின்பேரில்மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

11 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவி வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெல்லவாய நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தணமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மோ.சைக்கிள் – வான் மோதி கோர விபத்து

## இருவர் காயம்

அம்பாந்தோட்டை - மீகஹஜதுர வீதியில்ஞாயிற்றுக்கிழமைபிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

மூன்றுபேர்பயணித்மோட்டார் சைக்கிள் ஒன்று பாதுகாப்பற்ற முறையில் வீதியின் வலது பக்கமாக திரும்ப முயன்ற போது வான் ஒன்றுடன்மோதியதில்இந்தவிபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தவிபத்தின்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவரில் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் அம்பாந்தோட்டைபொதுவைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(05)

# பாணந்துறைக் கடலில் மூழ்கி இளைஞன் மாயம்

பாணந்துறை கடலில் மூழ்கி இளைஞன் ஒருவர் காணாமல் போயுள்ளார் என பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தசம்பவம்ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

பாணந்துறை, தொடவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞன் ஒருவரே காணாமல்போயுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது -

காணாமல்போன இளைஞன் மேலும்சிலநபர்களுடன்இணைந்து ஞாயிற்றுக்கிழமை மாலை பாணந்துறை கடலில் நீராடிக் கொண்டிருக்கும் போது இந்த இளைஞனும் மற்றுமொருநபரொருவரும்திடீரென கடலில் மூழ்கியுள்ளனர்.

இதன்போது, அங்கு கடமையிலிருந்த பாணந்துறை பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர் கடலில் மூழ்கிய இருவரில் ஒருவரை காப்பாற்றியுள்ள நிலையில் இளைஞன் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில், காணாமல்போன இளைஞனைத் தேடும் பணியில் பாணந்துறைபொலிஸ்உயிர்காப்புப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பாணந்துறை தெற்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# சிறைக்குள் போதைப்பொருள்களை கொண்டு சென்ற இருவர் கைது

களுத்துறையில் சம்பவம்

களுத்துறைசிறைச்சாலைக்குள் போதைப்பொருள்களைக் கொண்டு சென்றதாக கூறப்படும் இரண்டு சந்தேகநபர்கள்களுத்துறைபொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து ஐஸ், ஹெரோயின் மற்றும் புகையிலை உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவர் தான் அணிந்திருந்த சாரத்தினுள் மிகவும் சூட்சுமமான முறையில் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்து வைத்திருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் கம்பஹா - முதுன்கொட மற்றும் நீர்கொழும்பு -தெமன்ஹந்திய ஆகியபகுதிகளைச் சேர்ந்த 29 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

## மட்டு. சத்துருக்கொண்டான் படுகொலை:

# நினைவுத் தூபியில் கல்வெட்டு பதிப்பதை தடுத்து குழப்பம் விளைவித்த பொலிஸார்






மட்டக்களப்பு சத்துருக்கொண்டானில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவுத்தூபியை புனர்நிர்மானம் செய்து, அதில் இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள் என பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டை நேற்று (திங்கட்கிழமை) பதித்தனர்.

இதன்போது இந்த கல்வெட்டை பொலிஸார் பலவந்தமாக அகற்றி, அங்கு புனரமைப்பு செய்யவிடாமல் தடுத்ததையடுத்து பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டதில் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவியுள்ளது.

அத்துடன், அங்கு பொலிஸார் குவிக்கப்பட்டு சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உட்பட 7 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

1990 செப்ரெம்பர் 9ஆம் திகதி கொக்குவில், பனிச்சையடி, பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான் முதலானபிரதேசங்களைச் சேர்ந்த 85 பெண்கள், 10 வயதுக்குட்பட்ட 42 சிறுவர்கள், 25 வயோதிபர்கள் உட்பட 186 பொதுமக்கள் இராணுவத்தினராலும் ஊர்காவல் படையினராலும் ஒட்டுக்குழுக்களாலும் படுகொலை செய்யப்பட்டு 34 ஆவது நினைவேந்தல் நேற்று அஷ்டிக்கப்பட்டது.

இந்த நினைவேந்தலை முன்னிட்டு சத்துருக்கொண்டானில் அமைக்கப்பட்ட படுகொலை செய்யப்பட்டவர்களின் தூபியில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள், பொதுமக்கள் நினைவேந்தலை அனுஷ்டிப்பதற்கான முன்னாயத்த வேலைகளை செய்துகொண்டிருந்தனர்.

இதன்போது '1990ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட 186 அப்பாவி பொதுமக்கள்' என பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு மற்றும் உயிரிழந்தவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டை நினைவுத்தூபியில் பதித்துக் கொண்டிருந்தனர்.

அவ்வேளை அங்கு சென்ற கொக்குவில் பொலிஸார், 'இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் ஒட்டுக்குழுக்களால் படுகொலை செய்யப்பட்ட' என குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டை பதிக்க முடியாது என கூறி கல்வெட்டை பதிக்கவிடாமல் தடுத்துள்ளனர்.

இதன்போது அங்கிருந்த பொதுமக்கள் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பெரும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

அப்போது பொதுமக்கள், இது 1995 சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தபோது ஓய்வுபெற்ற நீதியரசர் கே.பாலகிட்ணன் தலைமையில் ஆணைக்குழு அமைக்கப்பட்டு, அதில் பாதிக்கப்பட்ட மக்களும் அதில் உயிர் தப்பியவர்கள் பலரும் இராணுவத்தினர், ஊர்காவல் படையினர் படுகொலை செய்ததாக சாட்சியமளித்து, அவை ஜனாதிபதி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில் யாரால் படுகொலை செய்யப்பட்டது என பெயர் பொறித்த கல்வெட்டை ஏன் பதிக்கக்கூடாது என பொதுமக்கள் கேள்வி எழுப்பி வாதம் செய்தனர்.

இந்நிலையில் தொடர்ந்தும் கல்வெட்டை பதிக்கவிடாது பொலிஸார் தடுக்க முற்பட்டபோது அதனை மீறி கல்வெட்டு பதிக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது அங்கு நின்ற பொலிஸ் அத்தியட்சகர் பொதுமக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட 7 பேரை அங்கிருந்து இழுத்துச் சென்று ஜீப் வண்டியில் ஏற்றியுள்ளார்.

அத்துடன் கல்வெட்டு பதிக்கும் வேலையை செய்துகொண்டிருந்த மேசனை இழுத்துத் தள்ளி, கல்வெட்டை அகற்றியதில் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அதனை தொடர்ந்து ஜீப் வண்டியில் ஏற்றப்பட்ட 7 பேரிடமும் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, பின்னர் இறக்கிவிடப்பட்டனர்.

அதேவேளை அங்கு பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.09.2024இல் வெளியிடப்பெற்றது